**ශ්‍රී ලංකා විවෘත විශ්වවිද්‍යාලය**

**මානව ශාස්ත්‍ර හා සමාජ විද්‍යා පීඨය**

**නීති අධ්‍යයන දෙපාර්තමේන්තුව**

**නීතිවේදී උපාධි පාඨමාලාව - 5 වන මට්ටම**

**අවසාන පරීක්ෂණය – 2013/2014**

**පරිපාලන නීතිය – LWU 3311**

**කාලය - පැය 3 යි**

---

දිනය: 2014 දෙසැම්බර් මස 10 දින වේලාව: පෙ.ව. 9.30 සිට ප.ව. 12.30 දක්වා

---

අපැහැදිලි අත් අකුරුවලට ලකුණු අඩු කරනු ලැබේ.

ප්‍රශ්න **පහකට (05)** පමණක් පිළිතුරු සපයන්න.

01. රිට් ආඥා සඳහා පෙත්සමක දී පරිපාලන නියෝගයක් පරීක්ෂා කරන විට මහාධිකරණය අභියාචනා බලය භාවිතා නොකරන අතර අභියාචනා බලයට වඩා පටු වූ අධිකරණ සමාලෝචන බලය භාවිත කරයි. එවැනි අධිකරණ සමාලෝචනයක් භාවිත කළ හැක්කේ වෙන්ස්බරි මූලධර්මය මත පමණි - *Union of India* v *Bilash Chand Jain* (2009)16 SCC 601-603 para, 05

අදාල නඩු තීරණ හා පරිපාලන නීති මූලධර්ම ඇසුරෙන් ඉහත ප්‍රකාශය විවේචනාත්මකව සාකච්ඡා කරන්න.

02. හිල්වුඩ්හි දිස්ත්‍රික් සභාව වූකලී දිස්ත්‍රික් සභා පනත යටතේ පිහිටුවන ලද ව්‍යවස්ථාපිත මණ්ඩලයකි. පනතේ 2 වන වගන්තියට අනුව දිස්ත්‍රික් සභාව විසින් එය පත් කරනු ලබන අධිකාරියේ අදහස් විමසීමෙන් පසුව පළාත් සභා ව්‍යවස්ථාවක් මගින් එයට පවරන ලද හෝ නියම කරන ලද ඕනෑම බලයක්, යුතුකමක් හෝ කාර්යයක් තම දිස්ත්‍රික්කය තුළ භාවිත කිරීම හෝ ඉටු කිරීම කළ යුතුය.

2005 දී ජාතික ගොඩනැගිලි පර්යේෂණ සංවිධානය විසින් නාය යෑමට ඉඩ ඇති ප්‍රදේශ ගණනාවක් හඳුනා ගනු ලැබූ අතර එම ප්‍රදේශවලට ආසන්නව ජීවත් වන පවුල් ඉන් ඉවත්කොට විකල්ප නිවාස සැපයිය යුතු බවත් නාය යෑමට ඉඩ ඇති ප්‍රදේශ රක්ෂිතයක් ලෙස ප්‍රකාශයට පත් කළ යුතු බවත් නිර්දේශ කරන ලදී. ජාතික ගොඩනැගිලි පර්යේෂණ සංවිධානය විසින් සිය නිර්දේශ අදාල අධිකාරීන්ට දන්වා තිබුණි. 2011 දී ජාතික ගොඩනැගිලි පර්යේෂණ සංවිධානය විසින් නාය යෑමේ අවදානම තවදුරටත් තහවුරු කරන ලදී.

ජාතික ගොඩනැගිලි පර්යේෂණ සංවිධානයේ නිර්දේශ මත පදනම්ව මධ්‍යම පළාත් සභාව විසින් ආපදා කළමනාකරණ හා ඉඩම් පැවරීමේ පනතක් සම්මත කොට නාය යෑමට ඉඩ ඇති ප්‍රදේශවල නිවැසියන්ට මෙම පනත යටතේ විකල්ප ඉඩම් පවරා දීමේ කාර්යය දිස්ත්‍රික් සභාවලට පවරන ලදී.

හිල්වුඩ් දිස්ත්‍රික්කයේ පිහිටා තිබූ ටොප්හිල් වතුයාය නාය යෑමට ඉඩ ඇති ප්‍රදේශවලින් එකක් ලෙස 2005 දී ජාතික ගොඩනැගිලි පර්යේෂණ සංවිධානය විසින් හඳුනාගෙන තිබුණි. 2012 දී ටොප්හිල්හි නායයෑමක් සිදු වී මිනිසුන් 50 දෙනෙකුට අධික සංඛ්‍යාවක් පස්වලට යටවූ අතර නිවාස 25 ක් පමණ, හින්දු කෝවිලක් හා පාසල් විනාශ විය. ව්‍යසනයෙන් පසුව අධික වර්ෂාවන් පැවති අවස්ථාවල දී නිවැසියන් පාසල්වල හා පන්සල්වල තාවකාලිකව පදිංචිකොට වර්ෂාව අවසන් වූ පසු නැවත තම නිවාසවලට යන ලෙස ඔවුන්ට දන්වන ලදී. මෙම තාවකාලික පිළියම් නිසා තම ජීවිකාවට හා ළමුන්ගේ අධ්‍යාපනයට බාධා සිදු වන බව නිවැසියෝ පැමිණිලි කරති.

ජාතික ගොඩනැගිලි පර්යේෂණ සංවිධානයේ නිර්දේශ පරිදි හැකි ඉක්මණින් තමන් යෝග්‍ය ස්ථානයක යළි ස්ථානගත කරන ලෙස නිවැසියන් විසින් දිස්ත්‍රික් සභාවට ඉල්ලීම් කිපයක් ඉදිරිපත් කර ඇත. කෙසේ වුව ද අධිකාරීන් විසින් නිවැසියන් යළි ස්ථානගත කිරීම සඳහා පියවර ගෙන නොතිබුණි.

තමන්ට ලබා ගත හැකි විසඳුම් පිළිබඳව නිවැසියන්ට උපදෙස් දෙන්න.

03. "ඇනිස්මිනික් තීරණය විසින් ඇති කරන ලද වෙනස වූයේ පරිපාලන විනිශ්චය සභා හා අධිකාරීන් සම්බන්ධයෙන් අධිකරණ බලය තුළ නීතියේ දෝෂ හා එසේ නොවූ නීතියේ දෝෂ අතර පැවති පැරණි වෙනස ප්‍රායෝගික අරමුණ සඳහා අහෝසි කිරීමයි." - Lord Diplock, in *Re Racal Communications Ltd* (1980) 2 ALL E.R. 634 at pp.638-639

විනිශ්චිත නඩු තීරණ ඉදිරිපත් කරමින් මෙම ප්‍රකාශය විවේචනාත්මකව සාකච්ඡා කරන්න.

04. රෙස්ටෝරියා රාජ්‍යයේ නාගරික සංවර්ධන අධිකාරිය වූකලී, නාගරික සංවර්ධන අධිකාරි පනත යටතේ ස්ථාපිත කරන ලද ව්‍යවස්ථාපිත මණ්ඩලයකි. එයට වෙනත් කරුණු අතර නාගරික සංවර්ධනය සඳහා අනවසර නේවාසික ගොඩනැගිලි කඩා බිඳ දැමීම හා එම කඩා බිඳ දැමීම් සිදු කරන ලද අවස්ථාවේ දී එම නිවැසියන් පදිංචිව සිටි නාගරික සීමාව තුළ වඩා

හොඳ පහසුකම් යටතේ විකල්ප නිවාසවල එම නිවැසියන් යළි ස්ථාපිත කිරීම සඳහා බලය ඇත.

නගර සංවර්ධන ව්‍යාපෘතිය ක්‍රියාත්මක කිරීම සඳහා සෙලනිකා නගරයේ සමහර මුඩුක්කු නිවාස කඩා බිඳ දැමිය යුතු ඒවා ලෙස නාගරික සංවර්ධන අධිකාරිය විසින් හඳුනාගෙන ඇත. දෙන්දෝරා එවැනි මුඩුක්කු ප්‍රදේශයකි. තම වත්මන් පදිංචි ස්ථානවලින් ඉවත් ව යන්නේදැයි නාගරික සංවර්ධන අධිකාරියේ නිලධාරීන් විසින් දෙන්දෝරා මුඩුක්කු නිවැසියන්ගෙන් විමසූ විට, සෙලනිකා නගරය තුළ වැඩි බිම් ප්‍රමාණයක් සහිත වඩා හොඳ නිවාස සපයන්නේ නම් තමන් ඉවත්ව යන බව ඔවුහු දන්වා සිටිය හ.

යෝජිත නිවාස ලබා දෙන නියම හා කොන්දේසි පිළිබඳව නොදත් බොහෝ නිවැසියෝ නාගරික සංවර්ධන අධිකාරිය විසින් නිකුත් කරන ලද අයදුම්පත් සම්පූර්ණකොට නාගරික සංවර්ධන අධිකාරියේ නිලධාරීන්ට භාර දුන්හ. ඉන්පසු නිවැසියන් විසින් රු 50,000/= ක ආරම්භක ගෙවීමක් සිදුකොට ඉන්පසු මාස තුනක් තුල දී නිවාස නඩත්තුව හා පවත්වාගෙන යාම සඳහා තවත් රු 50,000 ක් ද ඉදිරි වර්ෂ 20 කාලයක් තිස්සේ රු 3960/= ක මාසික වාරිකයක් ගෙවිය යුතු බව නිලධාරීන් විසින් දන්වන ලදී. නාගරික සංවර්ධන අධිකාරිය විසින් සපයනු ලබන නිවාස සෙලනිකා නගරයෙන් පිටත පිහිටා ඇති බවත් තමන් දැනට ජීවත් වන නිවාසවල බිම් ප්‍රමාණයට වඩා අඩු බිම් ප්‍රමාණයක් යෝජිත නිවාසවල පවතින බවත් නිවැසියන්ට දැනගත හැකි විය.

තම නිවාසවලින් ඉවත්ව යන ලෙස නාගරික සංවර්ධන අධිකාරියේ නිලධාරීන් විසින් නිවැසියන්ට දන්වා ඇත. තමනට ලබා ගත හැකි විසඳුම් මොනවා දැයි නිවැසියෝ ඔබෙන් විමසති.

ඔවුන්ට උපදෙස් දෙන්න.

05. (i) ස්ටේට්ලන්තයේ 1975 ආදායම් ආරක්ෂා කිරීමේ පනතේ 2 වන වගන්තිය යටතේ මුදල් හා ක්‍රම සම්පාදන අමාත්‍යවරයා සුදුසු යැයි සිතන පරිදි භාණ්ඩ ආනයනය මත බදු අනුපාතයක් නියම කරමින් නියෝග පැනවීමේ බලය අමාත්‍යවරයාට ලබා දී ඇත. එම නියෝග ගැසට් පත්‍රයේ පළ කල යුතු විය. 2013 පෙබරවාරි මස 01 වන දින සිට ක්‍රියාත්මක වන පරිදි සිමෙන්ති සඳහා ආනයන බද්ද 10% සිට 15% දක්වා වැඩි කරමින් අමාත්‍යවරයා විසින් ආදායම් ආරක්ෂා කිරීමේ පනතේ 2 වන වගන්තිය යටතේ

නියෝගයක් 2014 ජනවාරි මස 01 වන දින පනවනු ලැබීය. වැඩි කරන ලද බදු ප්‍රමාණය 2014 වසරේ ආනයනවලින් අය කර ගැනීමට නියමිත විය.

වසර 30 ක පමණ කාලයක් තිස්සේ කජ්කිස්ථානයෙන් ස්වෙට්ලන්තයට සුපිරි සිමෙන්ති ආනයනය කරන X & Y නම් සීමිත වගකීම් සමාගම, අමාත්‍යවරයා විසින් සාදන ලද ආදායම් ආරක්ෂා කිරීමේ නියෝග අභියෝගයට ලක් කිරීමට අදහස් කරයි.

සමාගමට උපදෙස් දෙන්න.

(ii) අභිනියෝජිත ව්‍යවස්ථාවල වාසි හා අවාසි සාකච්ඡා කරන්න.

06. ස්වෙට්ලන්තයේ ජාතික බුද්ධිමය දේපල දෙපාර්තමේන්තුව වූකලී, 2000 බුද්ධිමය දේපල පනත යටතේ පිහිටුවන ලද ව්‍යවස්ථාපිත ආයතනයකි. පනතේ 2 වන වගන්තියට අනුව යම්කිසිවෙකු විසින් සිය කාර්මික සැලැස්ම ලියාපදිංචි කිරීමට අදහස් කරන්නේ නම්, ඔහු හෝ ඇය විසින් බුද්ධිමය දේපල දෙපාර්තමේන්තුවේ අධ්‍යක්ෂක ජෙනරාල්වරයාට අයදුම්පතක් ඉදිරිපත් කළ යුතු විය. අයදුම්කරු විසින් පනතේ 2 (2) වගන්තිය යටතේ දක්වා ඇති අවශ්‍යතා සපුරාලිය යුතු වේ. පනතේ 2 (2) වගන්තිය යටතේ දක්වා ඇති අවශ්‍යතා සම්පූර්ණ කළ ෆවුසාන් අයදුම්පතක් ඉදිරිපත් කළේය. කෙසේ වුව ද කිසිදු හේතුවක් නොදක්වමින් අධ්‍යක්ෂ ජෙනරාල්වරයා විසින් අයදුම්පත ප්‍රතික්ෂේප කරන ලදී. මේ පිළිබඳව ෆවුසාන් අධ්‍යක්ෂක ජෙනරාල්වරයාගෙන් විමසූ විට ඔහු පැවසුවේ "අධ්‍යක්ෂ ජෙනරාල්වරයාගේ තීරණය අවසානාත්මක හා තීරණාත්මක වන අතර එය කිසිදු අධිකරණයක දී ප්‍රශ්න කළ නොහැක්කේය " යනුවෙන් බුද්ධිමය දේපල පනතේ 2 (5) වගන්තියේ සඳහන් වන බවයි.

අධ්‍යක්ෂ ජෙනරාල්වරයාගේ තීරණය අභියෝගයට ලක් කළ හැකි හේතු මොනවාදැයි ෆවුසාන් ඔබෙන් විමසයි. ස්වෙට්ලන්තයේ අර්ථ නිරූපණ පනත ලංකාවේ අර්ථ නිරූපණ ආඥාපනතට සමාන යැයි උපකල්පනය කරමින් ෆවුසාන්ට උපදෙස් දෙන්න.

07. ප්‍රකාශන ආඥාවේ වාසි හා පරිපාලන විසඳුම් සෙවීමේ දී නඩු කියන්නන් මුහුණ දෙන අධිකරණ බල ගැටලුව විවේචනාත්මකව සාකච්ඡා කරන්න. ඔබේ පිළිතුර අදාල විනිශ්චිත නඩු තීරණ මගින් සනාථ කල යුතුය.

08\. නිශාන්ත නව ලංකාවේ රාජ්‍ය දැව සංස්ථාවේ කම්හල් මෙහෙයුම් අංශයේ ආරක්ෂක නිලධාරියෙකු වශයෙන් වසර 10 ක් තිස්සේ සේවය කරයි. මාස තුනකට ඉහත දී නාඳුනන කණ්ඩායමක් කම්හල් මෙහෙයුම් අංශයට ඇතුලු වී වටිනා යන්ත්‍රෝපකරණ සොරාගෙන ගොස් තිබුණි. පොලිස් පරීක්ෂණ ආරම්භ කරන ලදී. මේ අතර සංස්ථාවේ කළමණාකාරිත්වය විසින් අභ්‍යන්තර පරීක්ෂණයක් ආරම්භ කරන ලද අතර ආරක්ෂක නිලධාරීන්ගේ නොසැලකිල්ල සොරකම සිදුවීමට මුල් වූ හේතුවලින් එකක් ලෙස උපකල්පනය කරන ලදී. කෙසේ වුව ද ආරක්ෂක නිළධාරීන්ට එරෙහිව කටයුතු කිරීම සඳහා සාක්ෂි ප්‍රමාණවත් නොවීය. සිය රාජකාරි ඉටු කිරීමේ දී නිසි සැලකිල්ල දැක්විය යුතු බවට කළමණාකාරිත්වය විසින් ආරක්ෂක නිලධාරීන්ට අවවාද කරනු ලැබීය.

08.11.2014 දින නිශාන්ත රාත්‍රි සේවයේ යෙදී සිටියේය. අලුයම 3.30 ට පමණ කම්හලේ වැඩ පරීක්ෂකවරයා වන රවි හදිසි පරීක්ෂාවක් සිදු කළ විට නිශාන්ත ආරක්ෂක මුරපලෙහි නොසිටි බව දුටුවේය. රවි සංස්ථාවේ කළමණාකාරිත්වයට පැමිණිලි කළේය.

මෙම කරුණ පිළිබඳව විමර්ශනය කිරීම සඳහා කළමණාකාරිත්වය විසින් සාමාජිකයන් තිදෙනෙකුගෙන් යුත් කමිටුවක් පත් කරන ලදී. පරීක්ෂණ කමිටුවේ සභාපතිවරයා වශයෙන් රවි පත් කරන ලදී. පරීක්ෂණයට දින තුනකට පෙර චෝදනා පත්‍රය නිකුත් කරන ලදී. සිය නිදහසට කරුණු ඉදිරිපත් කිරීම සඳහා තමන්ට වැඩිපුර කාලයක් අවශ්‍ය වන හෙයින් පරීක්ෂණය කල් දමන ලෙස නිශාන්ත ඉල්ලා සිටියේය. තවත් දිනයක් ලබා දීම කමිටුව විසින් ප්‍රතික්ෂේප කරන ලදී. පරීක්ෂණය පැවැත්වෙන අතරතුර දී කමිටුව නිශාන්තට පැවසුවේ "කම්හලේ මෙහෙයුම් ඒකකයේ මාස කිහිපයකට ඉහත දී සිදු වූ සොරකම සම්බන්ධයෙන් ඔබත් වගකිව යුතු බව අපි සිතනවා" යනුවෙනි. තමන් සොරකම සිදු වූ දින රාත්‍රි සේවයේ නිරත නොවූ බව නිශාන්ත පැවසීය. සාක්ෂිකරුවන්ගෙන් හරස් ප්‍රශ්න ඇසීම සඳහා නීති නියෝජිතයෙකු යොදවා ගැනීම සඳහා නිශාන්ත කමිටුවෙන් අවසර ඉල්ලා සිටියේය. කමිටුව එම ඉල්ලීම ප්‍රතික්ෂේප කළේය. නිශාන්ත සේවයෙන් පහ කළ යුතු බවට කමිටුව තීරණය කළේය.

පරීක්ෂණ කමිටුවේ තීරණය අභියෝගයට ලක් කිරීමට නිශාන්ත අදහස් කරයි.

ඔහුට උපදෙස් දෙන්න.

\- හිමිකම ඇවිරිණි. -

002

**THE OPEN UNIVERSITY OF SRI LANKA**

**FACULTY OF HUMANITIES AND SOCIAL SCIENCES**

**DEPARTMENT OF LEGAL STUDIES**

**LL.B DEGREE PROGRAMME – LEVEL V**

**FINAL EXAMINATION – 2013/2014**

**LWU3311 – ADMINISTRATIVE LAW**

**DURATION: 03 HOURS**

**DATE: 10th December 2014** **TIME: 9.30 a.m. – 12.30 p.m.**

**Total No. of Questions : 08**

**Number of questions to be answered: 05**

**Candidates will be penalized for illegible handwriting.**

1. "The High Court in a writ petition when examining an administrative order is not exercising the appellate power but exercising the power of judicial review which is much narrower than the appellate power." Such judicial review can only be exercised on Wednesbury principles"

   *Union of India* v *Bilash Chand Jain* (2009)16 SCC 601-603 para, 05

   Critically discuss the above statement with reference to relevant case law and Administrative law principles

2. The District Council of Hillwood is a statutory body established under District Councils Act. According to Section 2 of the Act (2) District Council shall, with the concurrence of its appointing authority, exercise, perform and discharge within its District, any power, duty or function conferred or imposed on, or assigned to, it by a Statute of a Provincial Council.

In 2005 the National Building Research Organization (NBRO) identified several landslide prone areas and it was recommended that the families living close by should be shifted from the place and provided with alternative houses and the area should be declared a reserve. The NBRO has informed the relevant authorities of its recommendation. In 2011 the possible danger of landslides was further confirmed by the NBRO.

Based on the recommendations of the NBRO the Central Provincial Council passed the Disaster Management and Land Alienation Act and the District Councils were assigned the task of allocating alternate lands to the residents of landslide prone areas under this Statute.

Tophill Estate is situated within the Hillwood district and is one of the landslide prone areas that had been identified by the NBRO in 2005. There was a catastrophe in 2012 in Tophill where more than 50 people were buried, and round 25 houses, a Hindu temple, and schools were destroyed. After the tragedy whenever there is heavy rain the residents are given temporary shelter in schools and temples and once the rain is over they are asked to go back to their homes. The residents complain that due to these adhoc arrangements their livelihood and the education of children are affected.

The residents have made several requests to the District Council to relocate them in a suitable place as per the NBRO recommendations as soon as possible. However no action has been taken by the authorities to relocate them.

Advise the residents as to the remedies available to them.

3. "... The breakthrough made by Anisminic was that as respects administrative tribunals and authorities, the old distinction between errors of law that went to jurisdiction and errors of law that did not was for practical purposes abolished. ....."

Lord Diplock, in *Re Racal Communications Ltd* (1980) 2 ALL E.R. 634 at pp.638-639

Critically discuss the statement citing relevant case law.

04. The Urban Development Authority of the State of Restoria is a statutory body established under the Urban Development Authority Act. It has power *inter alia* to demolish unauthorized residential structures for metropolitan development and also to relocate the residents of such units on alternative residencies with better facilities within the city limits where they reside at the time of demolition.

The UDA has identified some shanties in the city of Selanica to be demolished to carry out the metropolitan development project. 'Dendora" is one of the shanties. The residents of Dendora were asked by the UDA officers whether they would move from their current premises and they had responded that they would do so if it was to a better house (larger floor area) and also located within the City of Selanica.

Many residents who were not aware of the terms and conditions on which the proposed houses would be allocated, completed the application forms issued by the UDA and handed them over to the officers of the UDA. Thereafter the UDA officers informed the residents that they should pay an initial payment of Rs.50, 000 and a further Rs. 50,000 should be paid within three months towards maintenance and upkeep, and monthly installments of Rs. 3960 over the next 20 years. It was also noticed by residents that the new apartment units provided by the UDA are situated outside the city of Selenica and that the floor area of the proposed new condominium unit is smaller than the floor area of the houses they presently reside in.

The residents have been informed by the UDA to vacate their residences and move to the new apartment units. The residents seek your advice as to the remedies available to them.

Advise them.

5 (i) The Minister of Finance and Planning of the state of Stateland has been given power under section 2 of the Revenue Protection Act 1975 to make regulations specifying a rate of duty on import of goods as the Minister thinks fit. The regulation should be published in the Gazette. On 01st January 2014 the minister

made a regulation under section 2 of the Revenue Protection Act increasing the import duty on all cement from 10% to 15% with effect from 01st February 2013. The increased rates were due to be recovered from imports made during 2014. The above regulation has been published in the Gazette.

X & Y which is a limited liability company which has been engaged in importing Super Cement into Stateland from Kajkistan for about 30 years wishes to challenge the validity of the Revenue Protection regulation made by the minister. Advise the Company.

(10 marks)

(ii) Discuss the advantages and disadvantages of delegated legislation. (10 marks)

6. Stateland's National Intellectual Property Department is a statutory body established under the Intellectual Property Act 2000. According to Section 2 of the Act if anyone wishes to register his/her industrial design he/she should submit an application to the Director General of the Intellectual Property Department. The applicant has to satisfy the requirements established under section 2 (2) of the Act. Fawzan has submitted an application and fulfilled the requirements under section 2(2) of the Act. However the Director General has rejected Fawzan's application without stating any reasons. When Fawzan questioned the Director General he stated that Section 2(5) of the Intellectual Property Act states that "*The Director General's decision is final and conclusive and cannot be question in any court of law*"

Fawzan seeks your advice as to the grounds on which he could challenge the decision of the Director General. Assume that the Interpretation Act of Stateland is similar to the Interpretation Ordinance of Sri Lanka.

Advise Fawzan.

7. Critically discuss the advantages of declaratory orders and jurisdictional issues encounter by litigants in seeking an administrative remedy. Your answer should be supported with relevant case law.

8. Nishantha has been working as a security guard at the plant operation unit of the State Timber Cooperation of New Lanka for about 10 years. Three months ago, an unknown gang had entered the plant operation unit and stolen valuable machinery. Police investigations have commenced. In the mean time, the management of the corporation conducted a domestic inquiry and it was assumed that the negligence of the security guards was also one of the reasons for the robbery. However there was insufficient evidence to take action against the security guards. The security guards were warned by the management to take due care in performing their duties.

   On 8.11.2014 Nishantha was on night duty. At about 3.30 a.m. the Plant Supervisor Ravi made a surprise visit and found that Nishantha was not at the security point. Ravi made a complaint to the management of the corporation.

   The management appointed a three member committee to inquire into the matter. Ravi was appointed as the chairman of the inquiry committee. The charge sheet was issued three days prior to the inquiry. Nishantha has requested the committee to postpone the inquiry as he needs more time to prepare for his defense. The committee has refused to give another date. During the investigations Nishantha was told by the committee "we assume that you are also responsible for the robbery which took place couple of months ago in the plant operations unit." Nishantha replied saying that he was not on night duty on the day of the robbery. Nishantha has requested the committee to allow a legal representative to cross examine the witness. The committee turned down the request. The decision of the committee was that Nishantha should be dismissed.

   Now Nishantha wishes to challenge the decision of the inquiry committee. Advise Nishantha.

*-Copyrights reserved –*

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
மானுடவியல் மற்றும் சமூகவிஞ்ஞானங்கள் பீடம்
சட்டமாணி பட்டப்படிப்புத் திட்டம் - மட்டம் 5
இறுதிப் பரீட்சை 2013/2014
நிருவாகச் சட்டம் - LWU 3311
காலம்: மூன்று (03) மணித்தியாலயம்

திகதி: 2014.12.10 நேரம்: மு.ப 09.30 - பி.ப 12.30 வரை

**ஐந்து (05) வினாக்களுக்கு மட்டும் விடை தருக.**
**தெளிவற்ற கையெழுத்துக்களுக்கு புள்ளிகள் குறைக்கப்படும்.**

01. "நிருவாகக் கட்டளை ஒன்று தொடர்பான எழுத்தாணை தொடர்பான விண்ணப்பம் ஒன்றில் மேல் நீதிமன்றம் மேன்முறையீட்டு அதிகாரத்தைப் பிரயோகிக்காது. ஆயின், நீதிமுறை மீளாய்வு அதிகாரத்தைப் பிரயோகிக்கின்றது. இவ் அதிகாரம் மேன்முறையீட்டு அதிகாரத்தைவிட மிகவும் குறுகியதாகும்". அத்தகைய நீதிமுறை மீளாய்வு Wednesbury கோட்பாடுகளின் மீது மாத்திரமே பிரயோகிக்க முடியும்".

*Union of India v Bilash Chand Jain* (2009) 16 SCC 601-603 para, 05

இயைபான தீர்ப்புச் சட்டம் மற்றும் நிர்வாகச் சட்டக் கோட்பாடுகளுடன் தொடர்புறுத்தி மேற்கூறிய கூற்றை விமாசித்து ஆராய்க.

(20 புள்ளிகள்)

02. ஹில்வூட் மாவட்ட சபை, மாவட்ட சபைகள் சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட ஒரு நியதிச்சட்ட அமைப்பாகும். சட்டத்தின் பிரிவு 02 க்கு அமைவாக, மாவட்ட சபை, அதன் நியமன அதிகார சபையின் சம்மதத்துடன், தனது மாவட்ட எல்லைக்குள் மாகாண சபையின் நியதிச் சட்டம் ஒன்றின் கீழ் அதற்கு அளிக்கப்பட்ட அல்லது அதன் மீது அல்லது அதற்கு குறித்தொதுக்கப்பட்ட அல்லது விதிக்கப்பட்ட ஏதேனும் அதிகாரம், கடமை அல்லது பணி என்பவற்றைப் பிரயோகிக்க, நிறைவேற்ற மற்றும் ஆற்ற வேண்டும்.

2005 ஆம் ஆண்டு தேசிய கட்டட ஆய்வு மையம் (NBRO), மண் சரிவு அபாயம் ஏற்படக்கூடிய பல பிரதேசங்களை இனங்கண்டது. அத்துடன், அத்தகைய பிரதேசங்களில் உள்ள குடும்பங்கள் வேறு இடங்களுக்கு மாற்றப்படுவதுடன், அவர்களுக்கு மாற்று வீட்டு வசதிகள் வழங்கப்பட வேண்டும் எனவும், அந்தப் பிரதேசம் ஒதுக்கப்பட்ட ஒரு பிரதேசமாக பிரகடனப்படுத்தப்பட வேண்டும் எனவும் சிபார்சு செய்தது. NBRO அதனுடைய சிபார்சுகளை பொருத்தமான அதிகார சபைகளுக்கு அறிவித்தது. மண் சரிவு அபாயம் ஏற்படக்கூடிய பிரதேசங்கள் NBRO வினால் 2011 ஆம் ஆண்டு மேலும் உறுதிப்படுத்தப்பட்டது.

NBRO வுடைய சிபார்சுகளை அடிப்படையாக் கொண்டு, மத்திய மாகாண சபை அனர்த்த முகாமைத்துவ மற்றும் காணி ¯கையளிப்புச் சட்டத்தை நிறைவேற்றி அச்சட்டத்தின் கீழ் மாவட்ட சபைகளுக்கு மண் சரிவு அபாயப் பிரதேசங்களில் உள்ள வதிவாளர்களுக்கு மாற்றுக் காணிகளை ஒதுக்குவதற்கான பணி வழங்கப்பட்டது.

டொப்ஹில் தோட்டம் ஹில்வூட் மாவட்டத்தில் உள்ள, 2005 ஆம் ஆண்டு NBRO வினால் இனங்காணப்பட்ட மண் சரிவு அபாயம் ஏற்படக்கூடிய பிரதேசங்களில் ஒன்றாகும். 2012 ஆம் ஆண்டு டொப்ஹிலில் பேரழிவு ஒன்று ஏற்பட்டு, 50 பேர் மண்ணுக்குள் புதையுண்டனர், மற்றும் சுமார் 25 வீடுகள் ஒரு இந்து ஆலயம் மற்றும் பாடசாலைகள் என்பனவும் சேதமடைந்தன. இந்த அனர்த்தத்தின் பின்னர், கடுமையான மழை பெய்கின்ற போது அங்குள்ள வதிவிடவாளர்கள் பாடசாலைகள் மற்றும் கோவில்களில் தற்காலிகமாக தங்க வைக்கப்படுவதுடன், மழை ஓய்ந்த பின்னர் தத்தமது வீடுகளுக்குச் செல்லுமாறு பணிக்கப்படுவர். இத்தகைய தற்காலிக ஏற்பாடுகள் காரணமாக, தமது வாழ்வாதாரம் மற்றும் பிள்ளைகளின் கல்வி என்பன பாதிக்கப்பட்டுள்ளதாக பிரதேசவாசிகள் முறையிடுகின்றனர்.

பிரதேசவாசிகள் மாவட்ட சபைக்கு NBRO வின் சிபார்சுகளின் பிரகாரம், வெகு சீக்கிரத்தில் தம்மை பொருத்தமான ஒரு இடத்தில் மீளக் குடியமர்த்துமாறு பல வேண்டுகோள்களை விடுத்தனர். எனினும், அவர்களை மீளக் குடியமர்த்த அதிகாரிகள் எந்த நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை.

பிரதேசவாசிகளுக்கு இருக்கக்கூடிய நிவாரணங்களைப் பற்றி அவர்களுக்கு ஆலோசனை வழங்குக.

(20 புள்ளிகள்)

03. "…நிர்வாக சபைகள் மற்றும் அதிகார சபைகள் தொடர்பாக நியாயாதிக்கத்திற்கு அப்பாற்பட்ட சட்டப் பிழைகள் மற்றும் நியாயாதிக்கத்திற்கு உட்பட்ட சட்டப் பிழைகள் என்பவற்றுக்கு இடையிலான வேறுபாடு *அனிஸ்மினிக்* வழக்கில் தகர்த்தப்பட்ட தடை மூலம் நடைமுறை நோக்கங்களுக்காக இல்லாமல் ஆக்கப்பட்டுள்ளது…"

*Lord Diplock, in Re Racal Communications Lts* (1980) 2 ALL E.R. 634 at pp.638-639

இயைபான தீர்ப்புச் சட்டத்துடன் இக்கூற்றை விமர்சித்து ஆராய்க.

(20 புள்ளிகள்)

04. ரெஸ்டோரிய அரசின் மாநகர அபிவிருத்தி அதிகார சபை, மாநகர அபிவிருத்தி அதிகார சபை (UDA) சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட நியதிச்சட்ட அமைப்பொன்றாகும். இச்சபை ஏனைய அதிகாரங்களுடன் நகர அபிவிருத்தி நோக்கங்களுக்காக அதிகாரம் பெறப்படாமல் அமைக்கப்பட்ட வசிப்பிட கட்டமைப்புக்களை சிதைப்பதற்கு அதிகாரம் கொண்டிருந்தது. மேலும், அத்தகைய அமைப்புகளில் உள்ள வதிவிடவாளர்களை

அவ்மைப்புகள் அகற்றப்படுகின்ற போது சிறந்த வசதிகளுடன் அவர்கள் வசித்து வருகின்ற நகர எல்லைக்குள் மாற்று வசிப்பிடங்கள் வழங்கப்படுவதற்கும் அதிகாரம் கொண்டிருந்தது.

நகர அபிவிருத்தித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக அகற்றப்பட வேண்டிய சில சேரிப்புறங்களை UDA செலானிகா நகரத்தில் இனங்கண்டது. "தெந்தோரா" இனங்காணப்பட்ட சேரிப்புறங்களில் ஒன்றாகும். தெந்தோரா வதிவிடவாளர்களிடம் தமது தற்போதைய வசிப்பிடத்தில் இருந்து வேறு வசிப்பிடங்களில் மாற்றப்பட்டால் அங்கு செல்வதற்கு சம்மதமா என்பதை UDA வின் அதிகாரிகள் விசாரித்தனர். அதற்கு சிறந்த ஒரு வீடும் (விசாலமான தளப்பரப்பு) அதேவேளை அவை செலானிகா நகர எல்லைக்குள் அமைக்கப்படுமாயின் தாம் அவ்வாறு செல்வதற்கு விருப்பம் எனத் தெரிவித்தனர்.

உத்தேசிக்கப்பட்ட வீடுகள் எவ்வாறு அமைக்கப்படும் என்பது பற்றிய நியதிகள் மற்றும் நிபந்தனைகளை பற்றி அறியாத பல வதிவிடவாளர்கள் UDA வினால் வழங்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களைப் பூர்த்தி செய்து UDA அதிகாரிகளிடம் கைளித்தனர். அதன் பின்னர் UDA அதிகாரிகள் வதிவிடவாளர்களிடம் ரூபா 50,000/- ஐ ஆரம்பக் கொடுப்பனவாகவும், மேலும் ரூபா 50,000/- ஐ கட்டடத்தைப் பராமரிப்பதற்காகவும் மூன்று மாதங்களுக்குள் செலுத்தப்பட வேண்டும் எனவும் மற்றும் மாதாந்தம் ரூபா 3,960/- தவணைக் கட்டண அடிப்படையில் 20 வருட காலப்பகுதிக்கு மிகுதிப்பணத்தை செலுத்த வேண்டும் எனவும் அறிவித்தனர். மேலும், உத்தேசிக்கப்பட்ட புதிய அடுக்கு மாடி வீடமைப்புத் தொகுதி தற்போது இருக்கக்கூடிய தளப் பரப்பினை விட அளவில் சிறியது என்பதையும் வதிவிடவாளர்கள் அவதானித்தனர்.

வதிவிடவாளர்கள் தத்தமது இருப்பிடங்களில் இருந்து அகன்று புதிய கட்டுமான அமைப்புக்குச் செல்ல வேண்டுமென UDA வினால் அறிவிக்கப்பட்டனர். தமக்கு இருக்கக்கூடிய பரிகாரங்களைப் பற்றி வதிவிடவாளர்கள் உம்முடைய ஆலோசனையை நாடுகின்றனர்.

அவர்களுக்கு ஆலோசனை வழங்குகுக.

(20 புள்ளிகள்)

05. (i) ஸ்டேட்லாண்ட் அரசின் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சர் 1975 ஆம் ஆண்டின் வருமானவரி பாதுகாப்பு சட்டத்தின் பிரிவு 2 இன் கீழ் அமைச்சர் உகந்தது எனக் கருதக்கூடிய பொருட்கள் மீதான இறக்குமதி வரிகளைத் தீர்மானிப்பதற்கு ஒழுங்கு விதிகளை ஆக்கக்கூடிய அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது. இவ்வொழுங்கு விதி அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட வேண்டும். 2014 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆம் திகதி வருமானவரி பாதுகாப்பு சட்டத்தின் பிரிவு 02 இன் கீழ் 2013 ஆம் ஆண்டு பெப்ரவரி 01 ஆம் திகதியில் இருந்து அமுலுக்கு" வரக்கூடிய வகையில் இறக்குமதி செய்யப்படக்கூடிய அனைத்து சீமெந்துகளுக்கும் இறக்குமதி வரி 10% இல் இருந்து 15% ஆக அதிகரிக்கும் வகையில் ஒழுங்குவிதி பிறப்பிக்கப்பட்டது.

அதிகரிக்கப்பட்ட வரி 2014 ஆம் ஆண்டு காலப்பகுதியின் போது மேற்கொள்ளப்பட்ட இறக்குமதிகளிலிருந்து மீளப்பெறப்பட இருந்தது. மேலே குறிப்பிட்ட ஒழுங்குவிதி அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டது.

சுப்பர் சீமெந்தை கஜிகிஸ்தானில் இருந்து ஸ்ரேட்லாண்டுக்கு இறக்குமதி செய்யும் வியாபாரத்தில் கடந்த 30 வருடங்களாக ஈடுபட்டு வருகின்ற வரையறுக்கப்பட்ட X & Y கம்பனி அமைச்சருடைய வருமானவரி பாதுகாப்பு ஒழுங்கு விதியின் வலிதாந் தன்மையை கேள்விக்கு உட்படுத்த விரும்புகிறது.

கம்பனிக்கு ஆலோசனை வழங்குக.

(10 புள்ளிகள்)

(ii) கையளிக்கப்படட சட்டவாக்கத்தினால் அடையப்பெறும் அனுகூலங்களையும் பிரதிகூலங்களையும் ஆராய்க.

(10 புள்ளிகள்)

06. ஸ்ரேட்லாண்டினுடைய தேசிய புலமைச்சொத்து திணைக்களம் 2000 ஆம் ஆண்டின் புலமைச் சொத்துச் சட்டத்தின் கீழ் உருவாக்கபட்ட ஒரு நியதிச்சட்ட அமைப்பாகும். சட்டத்தின் பிரிவு 02 க்கு அமைவாக, எவரேனும் ஒருவர் அவன் / அவளுடைய கைத்தொழில் வடிவமைப்பைப் பதிவுசெய்ய விரும்பும் இடத்து, அவன் / அவள் புலமைச்சொத்து திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு விண்ணப்பம் ஒன்றைச் சமர்ப்பிக்க வேண்டும். விண்ணப்பதாரி சட்டத்தின் பிரிவு 02(2) இல் உள்ள தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்ய வேண்டும். பௌஸான் சட்டத்தின் பிரிவு 2(2) இன் கீழுள்ள தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்து தனது விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தான். எனினும், பணிப்பாளர் நாயகம், எவ்வித காரணங்களையும் குறிப்பிடாது பௌஸானுடைய விண்ணப்பத்தை நிராகரித்தார். பணிப்பாளர் நாயகத்திடம் பௌஸான் வினவிய போது, தேசிய புலமைச்சொத்து சட்டத்தின் பிரிவு 2(5) இன்படி "*பணிப்பாளர் நாயகத்தினுடைய தீர்மானம் முற்றும் முடிவானதாகும். அத்துடன், எந்தவொரு நீதிமன்றத்தினாலும் கேள்விக்குட்படுத்தப்பட முடியாது*" எனக் குறிப்பிட்டார்.

பணிப்பாளர் நாயகத்தினுடைய தீர்மானத்தை எந்த அடிப்படையின் மீது கேள்விக்குட்படுத்த முடியும் என்பது தொடர்பாக பௌஸான் உமது ஆலோசனையை நாடுகின்றார். ஸ்ரேட்லாண்டினுடைய பொருள்கோடல் சட்டம் இலங்கையின் பொருட்கோடல் கட்டளைச் சட்டத்தை ஒத்தது எனக் கருதுக.

பௌஸானுக்கு ஆலோசனை வழங்குக.

(20 புள்ளிகள்)

07. விளம்பல் கட்டளைகளின் அனுகூலங்களையும், அவற்றை நிர்வாக பரிகாரமாக பெற்றுக்கொள்வதில் வழக்குதாரிகள் எதிர்கொள்ளக்கூடிய நியாயாதிக்கம் தொடர்பான பிரச்சினைகளையும் விமர்சித்து ஆராய்க. உமது விடை இயைபான தீர்ப்புச் சட்டத்துடன் ஆதாரப்படுத்தப்பட வேண்டும்.

(20 புள்ளிகள்)

08. நிஷாந்த, நியூ லாங்காவினுடைய அரச மரக் கூட்டுத்தானத்தின் இயந்திர செயற்பாட்டு அமைப்பில் ஏறக்குறைய 10 வருடங்களாக பாதுகாப்பு ஊழியராக கடமையாற்றி வருகின்றான். மூன்று மாதங்களுக்கு முன்னர், இனந்தெரியாத ஒரு கும்பல் இயந்திர செயற்பாட்டு அமைப்புக்கள் உட்பிரவேசித்து பெறுமதியான இயந்திரங்களைத் திருடியது. பொலிஸ் விசாரணைகள் ஆரம்பமாயின. அதேவேளை, கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவம், உள்ளக விசாரணை ஒன்றை நடத்தியது. விசாரணையின் போது, பாதுகாப்பு ஊழியர்களுடைய கவனயீனம் இக்கொள்ளைச் சம்பவத்திற்கு இருக்கக்கூடிய காரணங்களில் ஒன்றாகும் என அனுமானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், பாதுகாப்பு ஊழியர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு போதுமான ஆதாரங்கள் இருக்கவில்லை. தமது கடமையை நிறைவேற்றும் போது உரிய கவனம் எடுக்க வேண்டும் என பாதுகாப்பு ஊழியர்கள் முகாமைத்துவத்தினால் எச்சரிக்கப்பட்டனர்.

08.11.2014 அன்று நிஷாந்த இரவுநேர கடமையில் இருந்தான். விடியற்காலை 3.30 மணியளவில் இயந்திர மேற்பார்வையாளரான ரவி, திடீர் வருகையை மேற்கொண்ட போது நிஷாந்த பாதுகாப்புக் கடமை மேற்கொள்ளப்படும் இடத்தில் இருக்கவில்லை. இது தொடர்பாக ரவி முகாமைத்துவத்திற்கு அறிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக, விசாரணைகளை மேற்கொள்ள முகாமைத்துவம் 03 பேர் கொண்ட விசாரணைக் குழு ஒன்றை நியமித்தது. ரவி விசாரணைக் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டான். குற்றப்பத்திரம் விசாரணைக்கு 03 நாட்கள் முன்பதாக வழங்கப்பட்டது. நிஷாந்த தன்னுடைய பிரதிவாதங்களை முன்வைப்பதற்கு மேலதிக கால அவகாசம் தேவை எனக்கூறி விசாரணைத் திகதியை பிற்போடுமாறு குழுவிடம் வேண்டினான். இன்னுமொரு திகதியை வழங்க விசாரணைக் குழு மறுத்தது. விசாரணைகளின் போது "*சில மாதங்களுக்கு முன்பு இயந்திர செயற்பாட்டு அமைப்பில் ஏற்பட்ட கொள்ளைச் சம்பவத்திற்கு, தாங்களும் பொறுப்பாளி என நாம் கருதுகின்றோம்*" என விசாரணைக்குழு நிஷாந்தவிடம் குறிப்பிட்டது. நிஷாந்த குறிப்பிட்ட கொள்ளைச் சம்பவம் நடைபெற்ற தினம் தான் இரவுநேரக் கடமையில் இருக்கவில்லை என பதிலளித்தான்.

சாட்சிகளை குறுக்குவிசாரணை செய்ய சட்டப் பிரதிநிதி ஒருவரை அனுமதிக்குமாறு நிஷாந்த குழுவிடம் வேண்டினான். இவ்வேண்டுகோள் விசாரணைக் குழுவினால் நிராகரிக்கப்பட்டது. நிஷாந்த சேவையில் இருந்து நிறுத்தப்பட வேண்டும் என விசாரணைக்குழு தீர்மானித்தது.

தற்போது விசாரணைக் குழுவினுடைய தீர்மானத்தை ஆட்சேபிக்க நிஷாந்த விரும்புகிறான். நிஷாந்தவுக்கு ஆலோசனை வழங்குக.

(20 புள்ளிகள்)

பதிப்புரிமை பெற்றது